Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 7

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் - 38	விசுவாவசு ஆடி 1965 ஜுலை	இதழ் 7

உள்ளுறை

பத்திராசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணு 4

சமாஜச் செய்திகள்

நம் சமாஜச் செயற்குழுக் கூட்டம் 25—7—65 ஞாயிறு காலை 9-30 மணிக்கு அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

4—7—65 ஞாயிறன்று நம் சமாஜச் சார்பில் மாணிக்க வாசகர் திருநாள் திருவல்லிக்கேணி பெரிய தெருவிலுள்ள கற்பக விநாயகர் வசந்த மண்டபத்தில் நிகழ்ந்தது. மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் திரு. மு. இராசாக் கண்ணனார் அவர்கள் தலைமையில் திரு. புலவர் முருகவேள் அவர்கள் "மாணிக்கவாசகர் மாண்பு" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

பிற செய்திகள்

ஆடி மாத விசேட தினங்கள்

8	(23-7-65)	மூர்த்தி நாயனார் விழா
	,,	புகழ்ச்சோழ நாயனார் விழா
11	(26-7-65)	கூற்றுவ நாயனார் விழா
19	(3-8-65)	பெருமிழலைக் குறும்ப நாயனார் விழா
20	(4-8-65)	சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழா
	,,	கழறிற்றறிவார் நாயனார் விழா
23	(7-8-65)	கலிய நாயனார் விழா
	,,	கோட்புலி நாயனார் விழா

புரசைத் திருநெறிக் கழகத்தின் சார்பில் திருஞான சம்பந்தர் திருநாள் 13—6—65 அன்று புரசை வேம்படி விநாயகர் கோவிலில் சிறப்புற நிகழ்ந்தது.

மேற்குறித்த கழகத்தின் 53 ஆம் திங்கள் வழிபாடு மேலை மாம்பலம் ஸ்ரீகாசிவிசுவநாதர் ஆலயத்தில் 20—6—65 ஞாயிறு அன்று சிறப்புற நிகழ்வுற்றது.

நம் சமாஜ உறுப்பினர் வேலப்பாளையம் எழுமாத்தூர் வித்துவான் திரு. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுடைய திருமகனார் திரு. துரைராஜ் அவர்கள் I. A. S. தேர்வில் வெற்றி பெற்றிருப்பது தெரிந்து நம் சமாஜம் மகிழ்ச்சி மீதூர்கின்றது. அவர்களுக்கு இறைவன் எல்லா நற்பேறுகளையும் பாலிக்குமாறு வேண்டி அவனருளை வழுத்துகின்றோம்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 38 | விசுவாவசு ஆடி 1965 ஜூலை | இதழ் 7

கல்வெட்டுகள்

(துணையாசிரியர்)

—★—

நம் சமயக் கருவூலங்களாய் திருக்கோயில் சுவர்களில் காணப்பெறும் கல்வெட்டுகள் கணக்கற்றவை. அவைகளைப் படித்து அறிவாரும் நாளுக்கு நாள் அருகிக்கொண்டு வருகின்றனர். அக்கல்வெட்டுகளைப் போற்றுவாருமின்றி அங்கங்கு அவைகளின்மீது சுண்ணும்பு, பெயிண்டு முதலியன பூசிப் படிக்க இயலாத நிலையில் பலவிடங்களில் மக்கள் செய்துள்ளனர். சில இடங்களில் திருப்பணி செய்வோர் கல்வெட்டைப் போற்றாது அக்கற்களைப் பின்னப்படுத்தி விட்டனர். இவ்வாறு அழிந்த கல்வெட்டுகள் அளப்பில. அழியாக் கல்வெட்டுகள் சிலவேயுள. அங்ஙனம் அழிந்த கல்வெட்டுகளால் எத்தனையோ நம் நாட்டு வரலாறுகள், பண்டைய மரபுகள், வழக்காறுகள் முதலியன அறிய முடியாத நிலையில் போய் விட்டன.

ஒருகாலத்து ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டபோது இக் கல்வெட்டுகளையெல்லாம் தொகுக்கும் வேலையிலீடுபட்டு அவைகளைச் சேகரித்து வைத்துள்ளனர். அவைகளைமுறைப் படுத்தி எண் கொடுத்து "தென்னிந்தியக் கல் வெட்டுகள்"

என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளனர். அவைகள் தற்போது கிடைப்பது அருமை. சில பழைமையான நூல் நிலையங்களில் தான் அக்கல்வெட்டுகளைப் பற்றிக் காண இயலும். பலரும் தங்கள் தங்கள் ஊருக்குக் கல்வெட்டுண்டா? எத்தனை கல் வெட்டுகள் இருக்கின்றன? என்பனவற்றைத் தெரிந்து கொண்டால் அவைகளில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைப் பின்னர்தெரிந்துகொள்ள வேட்கைமீதூர்வதில் வியப்பில்லை. அதனால் தங்களூரைப் பற்றியோ தங்களுக் குப் பிரியமான தலங்களைப் பற்றியோ தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. அது குறித்தே நம் சித்தாந்த இதழில் தென் னிந்தியக் கல்வெட்டுகளின் தொகுப்பேட்டினை வெளியிட லாமெனக் கருதியுள்ளோம். இத் தொகுப்பேட்டிலிருந்து அவரவர்கள் விரும்பும் ஊர்களின் கல்வெட்டு வரிசை எண் களையும் மொத்தக் கல் வெட்டுகளையும் தெரிந்து கொள்ள லாம். அன்பர்கள் அவரவர் விரும்பும் ஊர்களின் கல்வெட்டு எண்களை அறிந்து அவைபற்றி மேலும் பல செய்திகளைத் தெரிந்து பயன்பெற ஆவன முயல்வார்களாக!

திருவெஞ்சமாக் கூடல்

(அம்பை. சங்கரனார்)

நம் சமாஜ ஆண்டு விழாவையொட்டி அன்பர்கள் பலர் ஆண்டு விழா நிகழும் இடத்தின் அண்மையிலுள்ள பாடல்பெற்ற தலங்களையும் பிற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் தரிசிக்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வது மரபு. இம்முறையில் இவ்வாண்டு பேரூரில் சமாஜ மாநாடு முடிந்ததும் கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழினையும் தரிசிக்கச் சிலர் உறுதி கொண்டோம். கொங்கு நாட்டுத் தலங்கள் திருஅவிநாசி, திருமுருகன் பூண்டி, திருச்செங்கோடு, திருநணு, திருப்பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர், திருவெஞ்சமாக் கூடல் என்பனவாம். இவற்

றுள் கடைசித்தலமாய திருவெஞ்சமாக் கூடலைப் பற்றிச் சில காண்போமாக.

இத்தலம் கருவூரிலிருந்து 14கற்கள் தொலைவில் இருக்கின்றது. ஒந்தம்பட்டிக்கு 11 கற்கள் நெடுஞ்சாலையில் சென்று பின் குறுக்குவழியாக 3 கற்கள் சென்றால் குழகனாறு செல்கின்றது. தற்போது மக்கள் குடவனாறு என்கின்றனர். அவ்யாற்றின் கரையின் கீழ்பால் மிகவும் காட்சியின்பம் பயப்பதாய் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. உந்துவண்டிமூலம் செல்ல விரும்புவோர் ஒந்தம்பட்டிக்கு அப்பால் சென்று ஒரு பாலத்தைக் கடந்து நல்ல சாலை வழியாகவே இத்திருக்கோயிலை வந்து சேரலாம். கூடுதலாகச் சில கற்கள் பயணம்செய்யவேண்டியிருக்கும்.

இத்திருக்கோயிலைக் கண்ணுற்ற எந்தச் சைவரும் மனமுருகாதிருக்க முடியாது. கோவில் மிகவும் சிதிலமான நிலையில் உள்ளது. ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாய்த் திகழ்ந்த இத்திருக்கோவிலின் சில பிரகாரங்கள் மிகவும் பாழ்பட்டுக் கிடக்கின்றன. அங்குள்ள திருவுருவங்களையெல்லாம் உட்பகுதியில் எடுத்து வைத்திருக்கிறார்கள். மானியங்கள் நிறையவிருக்கின்றன. தக்க பராமரிப்பு இன்மையாலும், நடுவிலுள்ளோர் தந்நலத்தாலும் இயற்கையின் காய்வாலும் மற்றும்பல காரணங்களாலும் இக்கோவில் வறுமை நிலையையடைந்துள்ளது. மக்களாய்ப் பிறந்தோருக்குத்தான் செழிப்பு, வறுமை ஆகியன அவரவர் வினைக்கீடாய் வருமென்று படித்திருக்கின்றோம். இறைவனுறையும் திருவிடங்களும் இவ்வாறு வறுமைக்கு ஆளாகின்றனவேஎன்று துன்புற்றேன். பின்னர் ஔவையாரின் அருமைவாக்கொன்று என் கண்ணீரைத்துடைத்து அமைதியைத் தந்தது.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்ற பொன்னுரைப்படி அப்பகுதி மக்கள் போற்றாமை காரணமாகவே அக்கோவில் இவ்வாறு பாழடைந்துள்ளது என்பதனைத் தெரிந்து வருந்தினேன்: ஆயினும் இந்நிலை இவ்வாறு நீடித்திருக்காது செய்வது பொதுவாக அவ்வூரி

னருக்கும் சிறப்பாகக் கொங்கு நாட்டினருக்கும் அதற்கும் மேலாகத் தமிழராய்ப் பிறந்து சைவர் என்று கூறித் திரியும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு வாய்ந்தகடமையாகும். அக்கோவிலை மிக நன்முறையில் செப்பஞ்செய்து வைத்துக் கொள்ள ஆம் கடமைகளைத் தக்க தரும சீலர்கள் மேற் கொள்வார்களாக. கொங்கு நாடு என்றாலே பொன் செழிப்புற்ற நாடு என்பது பொருளாகும். ஆகவே யாரா வது ஒரு செல்வர் மனம் வைத்தாலும் இக்கோவில் திருப் பணி முற்றுப்பெறுவது ஒருதலை. இக்காலத்துப் பல்வேறு காரணங்களுக்காகப் பணத்தை மக்கள் செலவிடாம லில்லை. அவைகள் எல்லாம் தற்காலிகப் பெருமை தரக் கூடியவை. இக்கோவில் திருப்பணியை மேற்கொண்டு முற்றுப்பெறச் செய்தால் பன்னெடுங்காலம் அவர்கள் திருப்பெயர் சிறப்புற்றிலங்கும். அன்பர்கள் இதற்கு முனைய வேண்டுகின்றேன்.

இங்குள்ள திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெரு மான் பெயர் கல்யாணவிகிர்தேஸ்வரர். 'வெஞ்சமாக்கூடல் விகிர்தா' என்ற தேவாரப் பகுதியைக் காண்க. கிழக்கே பார்த்த சந்நிதி. சுவாமி கோவிலின் இடப்பக்கம் அம்பாள் திருக்கோவில் தனித் திருச்சுற்றோடுகூடியதாக உள்ளது. அம்பாள் திருப்பெயர் பன்னீர் மொழியம்மை (மதுர சுபாஷிணி) விகிர்தேஸ்வரி என்றும் கூறுவர். ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் மிக அழகிய திருவுருவத்துடன் காட்சிஅளிக்கிறார். மற்ற திருக்கோயில் களிலுள்ளவாறு எல்லாத் திருவுருவங்களுமுள்ளன.

3 குருக்கள் வீடுகள் உள. இரண்டு கால வழிபாடு கள் நடந்துகொண்டிருக்கின்றன. மொத்தம் சுமார் 20 வீடுகளே இக்கிராமத்திலுள்ளன. மொத்த ஜனத் தொகையே 100 பேர்தானிருக்கும். மாசி மகத்தில் பெரு விழா நடப்பதுண்டாம். பக்கங்களிலுள்ள கிராமங்களி லிருந்து மக்கள் திரண்டு வருவார்களாம். கல்வெட்டுகள் பல உள்ளன. ஆறுமுக ஓதுவார் என்ற ஒருவர் இங்கு திருப்பதியம் ஓதும் தொண்டிலீடுபட்டுப் பரம்பரையா யிருந்தவர் தற்போது வருவாய் போதாமையினால் பழனிக் குச் சென்றுவிட்டதாகக் கூறுகின்றனர். கருவூர்த் திருக்

கோயிலின் அதிகாரியே தற்போது இதனையும் மேற்பார்க்கின்றார். எப்பொழுதாவது வந்து விசாரித்துச் செல்லுவதாகக் கூறுகின்றனர்.

திருக்கோயில்களை நன்னிலையில் நிறுத்த முனைந்த திரு. உத்தண்டராம பிள்ளையவர்கள் காலத்து, அவர்கள் நேராக இக்கோவிலை வந்து பார்த்து வருந்தி ரூ. 5000 (ஐயாயிரம்) திருப்பணிக்கு ஒதுக்கியதாகத் தெரிகிறது. அந்நிதியிலிருந்து கோவில் விமானம் முதலிய சில பகுதிகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இன்னும் சில பணக்காரர்கள் இக்கோவில் திருப்பணியை மனத்துட் கொண்டால் மிக நன்றாயிருக்கும். ஆற்றின் கரையோரமாக இத்திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தங்களால் சிறப்புற அமைந்திருக்கும் காட்சியே மேலோங்கி விளங்குகிறது.

இத்திருப்பதி சுந்தரர் தேவாரம் பெற்ற திருத்தலமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூரில் உள்ள பெருமானை வணங்கியபடியே கொங்கு நாட்டில் உள்ள பல பதிகளையும் தரிசித்துப் பின்னர் வெஞ்சமாக்கூடல் வந்தணைந்தார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது. பேரூரில் சுந்தரர் பாடியிருந்தும் நம் போற்றாமை காரணமாக அத்திருப்பதியம் கிடைக்கவில்லை.

ஆயிடை நீங்கி அருளினாற் செல்வர்
அருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் தமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார்
தென்திசைக் கற்குடி மலையில்.

எனச் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளியிருப்பதைக் காண்க.

ஆகவே சுந்தரமூர்த்திசுவாமிகளால் பாடப்பெற்றதும் கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றாய் விளங்குவதும்

மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்ருன் சிறந்து விளங்கு வதுமாய இத்திருக்கோயிலைச் சைவ சீலர்கள் கண்ணுற்றுத் திருப்பணிபுரிந்து சிறந்து மிக்கோங்கச் செய்வதோடு தங்கள் வாழ்நாட்களுக்கும் பயன் தேடிக்கொள்வார்களாக. நினைத்தால் நாளையே இத்திருக்கோயில் திருப்பணி முற்றுப்பெறுவதில் ஆச்சரியமில்லை. அந்நினைப்பு வேண்டுமே? அத்தகைய இறையருட் கலப்பு வாய்ந்த நன்னினைப்பை எம்பிரானின் திருவருட் குறிப்பு தூண்ட அவனருளையே வழுத்தி வணங்குகின்றேன்.

மந்திரமும் மருந்தும்

ந. வீ. செயராமன் எம். எ., விரிவுரையாளர்,

(தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணமலைப் பல்கலைக்கழகம்.)

உவமையிலாக் கலைஞானமாகவும், உணர்வரியமெய்ஞ் ஞானமாகவும் விளங்குவது சிவஞானச் செல்வமேயாகும். சிவஞானச் செல்வத்தைத் தரவல்ல சாதனங்கள் பலவற்றுள்ளும் திருநீற்றுச் சாதனமும் ஒன்று. சிவனடியைச் சிந்தித்துத் திருநீறு அணிவார்க்குப் பவமதனை மாற்றும் ஞானம் கிட்டும்.

இறைவணுகிய சிவபெருமான் மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியனுகவே விளங்குகின்ருன். அவனது பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறு கண்டு மகிழ்ந்த அடியார் மனிதப் பிறவியையும் வேண்டி நிற்கும் வியப்பினைக் காண்கின்ருேம். சிவபெருமான் திருநீறு அணிந்திலங்கும் அழகைத் தேவார ஆசிரியர்களும் மற்ருேர்களும் நாவாரப் பாடி வழுத்துகின்றனர்.

'சுண்ணவெண்ணீறு துதைந்திலங்கு நூலுடையான்'

என்று சம்பந்தரும்,

'பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்'

என்று அப்பரும்,

'வாஞ்சியத்தடிகள் மறுவிலாத வெண்ணீறு பூசுதல் மன்
னும் ஒன்றுடைத்தே

என்று சுந்தரரும்,

'நீறணி அம்பலவன்'

என்று மாணிக்கவாசகரும்,

'விரிசுடர்ச் செம்பவள ஒளிவெயில் விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேல் திருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்
திலங்க'

என்று சேக்கிழாரும் தித்திக்கும் செந்தமிழில் பாடி மகிழ்ந்துள்ளனர்,

சிவனடியைச் சிந்திக்கும் சிவநேசச் செல்வர்களும் நீறணிந்து விளங்கிய பான்மையை 'வெந்த நீறணி மார்பன் சிறுத்தொண்டன்' என்றும், சிவன் 'திருநீற்றினை வளர்க்கும் பாண்டிமாதேவி' என்றும் 'வெள்ளை நீறணியும் குலச்சிறை' என்றும், 'நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமம் செய்து ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தணனர்' என்றும் சேக்கிழார் பெருமான் வீறுபெற விளக்கிக்காட்டுகின்றார். அத்துடன் அமையாது தொகையடியார்களில் முழுநீறுபூசிய முனிவரையும் போற்றியுள்ளார்.

இங்ஙனம் சைவத்தோடும், சைவ அடியார்களோடும் நெருங்கிப் பிணைந்த திருநீற்றுச் செல்வத்தின் சிறப்பையும் சீர்மையையும் அறிதல் இன்றியமையாதது அன்றோ? திருநீறு சிவாக்கினி நீறு, வைதிகாக்கினி நீறு, சைவாக்கினி நீறு என முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. சிவாக்கினி நீறும், வைதிகாக்கினி நீறும், சைவாக்கினி நீறும் அவற்றின் வகைகள் இன்னின்னவை என்ற விளக்கத்தோடு சிவாகமங்களில் சீர்பெற விளக்கப்பட்டுள்ளன. சிவாக்கினி நீறு குரு பற்பம், லகு பற்பம் என இருவகையாகி அவற்றுள் லகுபற்பம் நிருபாதிக நீறு, உபாதிக நீறு என இருவகையாகும் என்றும் வைதிகாக்கினி நீறு சிரௌதம், ஸ்மார்த்தம், லௌகிகம் என மூன்று வகையாகி, அவற்றுள் சிரௌதம் புராதனி, சத்தியோசாதை என இருவகையாகும் என்றும், சைவாக்கினி நீறுசைவம், அசைவம் என இருவகையாகி, அவற்றுள் சைவ நீறு கற்பம்,

அநுகற்பம், உபகற்பம் என மூவகையாகும் என்றும் விபூதி விளக்க நூலுடையார் கூறுவார். சிவாகமங்களில் இவ்வகைகள் வேறுபடவும் மாறுபடவும் கூறியிருத்தல் உண்டு என்றும் அறிகின்றோம்.

மேலே கண்ட மூவகை நீற்றில், இறுதியில் உள்ள சைவாக்கினி நீறே உலகியலில் வழங்குவதாகும்.

திருநீற்றுச் செல்வத்திற்குமூலமாயுள்ள சாணத்தைத் தரும் பசுக்கள், சிவன் திருமேனியில் பூத்த இயற்கை நீறை யுண்ட வீர இடபத்தின் வீரிய சம்பந்தம் பெற்று திருப் பாற்கடலில் சிவனாணைப்படி தோன்றிய நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை ஆகிய ஐந்து பசுக்களினின்றும் தோன்றி இனப்பெருக்கமடைந்தனவாகும் என்பது புரா ணம். பசுக்களினின்றும் பெறுகின்ற பஞ்ச கௌவியம் எனப்படும் தயிர், பால், நெய், கோசலம், கோமயம் என் னும் ஐந்துமே பூசைக்கும் புனிதத்துக்கும் உரியனவாக விளங்குகின்றன. சிவபூசையைச் சிறக்கச் செய்யும் பஞ்ச கௌவியங்களை அளித்தருளும் ஆக்களைப் போற்றியே 'ஆவினுக் கருங்கலம் அரனைஞ் சாடுதல்' என்று அப்பரும் அமுத மொழியால் போற்றினர். ஆன் சாணத்தின் புனி தத் தன்மையைக் கருதியே அதனைக் மெழுக்கிடுகின்றார் கள். புலர்வதன்முன் திருவலகு பணிமாறிய பின்னர்புனி றகன்ற நலமலி ஆன் சாணத்தால் திருவதிகைத் திருக் கோயிலைத் திருமெழுக்கிட்ட திலகவதியாரின் திருத் தொண்டைச் சேக்கிழாரும் கூறியுள்ளது அறியத்தகும்.

இத்தகைய சிறப்புள்ள பசுக்களுள், கன்றுள்ளதாக வும், வலிவும் வனப்புமுள்ளதாகவும் நடுத்தர வயதுள்ள தாகவும் உள்ள குற்றமில்லாப் பசுவினிடமிருந்து சாணம் பெற்றுத் திருநீறு செய்தல்வேண்டும் என்றும், கன்றின்று பத்து நாட்களே ஆகியுள்ளதும், கன்று ஈனாததும் நோய் கொண்டதும் முதிர்ந்த வயதுள்ளதும், மலடானதும், மலந்தின்பதுமாகிய பசுக்களிடமிருந்து திருநீறு செய்யச் சாணம் பெறுதலாகாது என்றும் கூறுவர்.

பசுக்களிடமிருந்து சாணம் பெறுங்காலை, அந்தணர் வெண்ணிறப் பசுவினிடமிருந்தும், அரசர் செந்நிறப் பசு

வினிடமிருந்தும், வணிகர் பொன்னிறப் பசுவினிடமிருந்தும், வேளாளர் கருநிறப் பசுவினிடமிருந்தும் சாணம் கொள்ளுதல் சாலச் சிறப்புடையதாகும் என்றும் சாற்றுவர் அறிஞர்.

சாணம் ஏற்கும்போது பசுவின் பின்புறத்திலே கை வைத்து ஏற்பது சாந்திகம் என்றும். நிலத்தில் சாணம் வீழுமுன் தாமரை இலை, அல்லது வாழையிலையில் ஏற்பது பௌட்டிகம் என்றும், நிலத்தில் விழுந்த பின் ஏற்பது காமதம் என்றும் கூறுவர். இவற்றுள் பௌட்டிக முறையே பாங்குடையதாகும் என்றும் சிறுப்பித்துக் கூறுவர்.

மேலே கூறியவாறு சிறந்த பசுக்களிடமிருந்து பௌட்டிக முறையில் பெற்ற சாணத்தை மேல்வழும்புகளை நீக்கி பஞ்ச வில்வங்களையும் பஞ்ச கௌவியங்களையும் சேர்த்துப் பிசைந்துருட்டி சம்பா நெற்பதர் அல்லது உமிபரப்பிய இடத்தில் உருண்டைகளை வைத்துத் தீயிட்டு நீறுக்கி எடுக்கப்பட்டதே சைவ விபூதியில் ஒன்றுன கற்ப விபூதியாகும்.

வெந்து நீறுகிய விபூதியை எடுக்குங்கால் கருநிற விபூதி வியாதியைத் தருமாதலாலும், செந்நிற விபூதி புகழைக் கெடுக்குமாதலாலும், புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்குமாதலாலும், பொன்னிற விபூதி செல்வத்தைக் கெடுக்குமாதலாலும் அவற்றை விடுத்து வெண்ணிற விபூதியையே பொறுக்கி எடுத்தல் வேண்டும் என்பர்.

இனி, காட்டில் மரங்கள் இணைந்து உராய்ந்து உண்டாகிய தீயில் வெந்து விளைந்த சாம்பரும், செயற்கையாயுள்ள சூளைகளின் சாம்பரும், ஆகிய இவற்றைப் பஞ்ச கௌவியம் இட்டுப் பிசைந்து தீயிலிட்டுப் பெறுவது அநுகற்ப நீறுகும் என்பர். இத்துடன் பசுக்கள் தங்கியுள்ள இடங்கள் தீப்பற்றிக் கொண்டால் அதிலிருந்து கிடைக்கும் சாம்பரையும் சேர்த்துக் கூறுவார் சேக்கிழார்.

பசுக்கள் நிறைந்துள்ள மந்தைகளுக்கும், பசுக்கள் மேயும் காடுகளுக்கும் சென்று அங்கு உலர்ந்து கிடக்கும்

சாணங்களைத் திரட்டி, இடித்து, நுண்பொடியாக்கி, அதில் பசுவின் கோசலத்தை விட்டுப் பிசைந்து தீயிலிட்டுப் பெறுவது உபகற்ப நீருகும்.

மேலே கூறிய கற்பம், அநுகற்பம், உபகற்பம் ஆகிய மூன்றும் சைவ விபூதி என்னும் வகையினுள் அடங்குவனவாகும். இடிவிழுந்த இடத்திலுண்டாகிய நீறும், மலையுச்சியில் கிடைக்கும் நீறும், மருதமலை, பேரூர், திருக்குறுக்கை, திருநீற்றுமலை, திருவண்ணுமலை, வில்வாரண்யம், கதிர்காமம் முதலிய தலங்களில் இயற்கையாக பூமியில் விளைந்த நீறும் அசைவ விபூதி அல்லது அகற்ப நீறு என்னும் வகையினவாகும். 'ஆகாதென்றங் குரைத்த அகற்பம்' எனச் சேக்கிழார் கூறுவதால், இந்த அசைவ விபூதி சைவதீக்கைக் குரியரல்லார்க்கு உரியதாகும் என்று கூறுவர்.

திருநீற்றைச் சேமித்து வைத்துள்ள திருநீற்றுப் பெட்டகத்தில், திருநீற்றைச் சிவவடிவாகவும், பெட்டகத்தைச் சக்தி வடிவாகவும், இடையில் உள்ள கயிற்றைப் பிரமவடிவாகவும் கொண்டு அறிஞர்கள் தத்துவப் பொருளுரைப்பர்.

திருநீற்றை, நீறு, விபூதி, இரட்சை, சாரம், பசிதம், காப்பு எனப் பல்வேறு பெயர்களால் கூறுவர்.

> நீறுபுனைவார் வினையை நீறுசெய்த லாலே
> வீறுதனி நாமமது நீறென விளம்பும்.

என்பதற்கேற்ப, தன்னை அணிந்தார்களின் பாவங்களைப் போக்க வல்லதாதலின் நீறு என்றும்; மேலான செல்வநிலையைத் தருதலால் விபூதி என்றும், உயிர்களைக் காத்தலினுல் இரட்சை என்றும், அஞ்ஞான அழுக்கைப் போக்குதலால் சாரம் என்றும், ஞான ஒளியைத் தருதலால் பசிதம் என்றும் திருநீற்றுச்செல்வம் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றது.

திருநீறு அணியுமிடங்கள் இன்னின்னவை என்று கூறுவதில் வேறுபட்ட கருத்துகள் உள. ஐந்திடங்கள், எட்டிடங்கள், பன்னிரண்டு இடங்கள், பதினுறு இடங்கள், முப்பத்திரண்டிடங்கள், முப்பத்தெட்டிடங்கள்

ஆகியவற்றில் அணிதல் வேண்டும் என்பர். ஆயினும் திருநீறு அணியும் ஒவ்வோரிடத்திற்கும் ஒவ்வோர் அதிதெய்வத்தைக்கூறி தத்துவப் பொருள் உரைப்பர்.

திருநீற்றை நாம் நமது நெற்றியில் குறுக்கு வடிவில் முக்குறியாக இடுகின்றோம். இங்ஙனம் இடுகின்ற மூன்று குறிகளும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளையும், அகரம்,உகரம்,மகரம் ஆகிய பிரணவப்பொருளையும், சிவன், சதாசிவன் மகேசுவரன் ஆகிய மும்மூர்த்திகளையும் அருவம் உருவம் அருவுருவம் ஆகிய மூன்று வடிவங்களையும் குறிப்பாகச் சுட்டி நிற்கின்றன என்றும் தத்துவப் பொருள் கூறுவர்.

திருநீற்றின் சிறப்பையும் சீர்மையையும் நமக்குஎடுத்துக் காட்டுவனவாக அடியார் பலரது வாழ்க்கைகள் அமைந்துள்ளன. தீமை புரிந்தொழுகும் தீயவராயினும் அவரணிந்த திருநீற்றுக் குறிகண்டு தொண்டராயினர் பலர். தாம் கொல்லச்சென்ற தீயவன் அதிசூரன் நெற்றியில் திருநீற்றுக்குறிகண்டஏனாதிநாயனர்'அண்டர்பிரான் சீரடியார் ஆயினர் இவர்' என்று அவனைக் கொல்லாது தாழ்ந்து வணங்கியதுடன், தன்னை அவன் கொல்லும் போது, வாளாவிருந்த வன்மையை வியவாதார்யாருமிரார்! 'திருநீறு தாங்கிய நெற்றியினர் தங்களை எவ்விடத்தும் ஏனாதி நாயனர் தீங்கிழையார்' என்று பகைவரும் அறிந்து கொண்டிருந்தனர் என்பதால், ஏனாதி நாயனரின் திருநீற்றுப் பக்தியை நாம் தெளிவாகக் காண்கின்றோம். இனி மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டி, கையினிற் படை கரந்த புத்தகக் கவளிஏந்தி பொய்த்தவவேடங் கொண்டு வந்த முத்தநாதனின் பத்தி வேடத்தில் மனம் பறிபோன மெய்ப்பொருள் நாயனர் தன் இன்னுயிரையும் ஈந்த வரலாறு 'மெய்யெலாம் நீறுபூசிய மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்ற உண்மையை நமக்கு உணர்த்துகின்றது. நெற்றியில் நீறிட்டவரை நின்மலனுக் கொண்டு தொண்டு செய்யும் தன்மையைக் கழறிற்றிவார் வரலாற்றில் காண்கின்றோம். உவர்ப் பொதிசுமந்து மழையில் நனைந்து மேனிவெளுத்த வடிவோடுவந்த வண்ணானைக் கண்டு, யானையிலிருந்து இழிந்த கழறிற்றறிவார் 'திரு

நீற்றின் வார வேடம் நினைப்பித்த' தன்மைக்குப் பணிந்தெழுந்ததைக் காண்கிறோம். மேலும் திருநீறும், கண்டிகையும், சடை முடியும் கொண்டு மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனார் வாழ்விலும் திருநீற்றின் சீர்மை தெளிவாக விளக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம்.

இங்ஙனம் பேணியணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுக்கும் திருநீற்றை அணியாதார் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார் என்றும், திருவெண்ணீறு அணியாத திருவில் ஊர் ஊரல்ல அடவிகாடே என்றும் அப்பரடிகள் பாடுகின்றார். திருவாளன் திருநீற்றைத் திலகவதி யாரிடமிருந்து பெற்றுபெரு வாழ்வு பெற்றவரன்றோ அப்பர்! சிவாயநமவென்ற சிந்தைச் சுருதியுடன் திருநீறு மருந்தாய் மந்திரமாய்ப் பயன்பட்டு அவர் சூலை நோய் தீர்த்தருளிய தன்மையை நாம் மறக்க இயலாது. அங்ஙனமே பாண்டியனின் வெப்பு நோயை ஞானசம்பந்தப் பெருமான் 'மந்திரமாவது நீறு' என்ற பதிகம் பாடித் தீர்த்த தன்மையைச் சம்பந்தர் வரலாற்றில் காண்கின்றோம். ஆற்றலடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப் பூசி, தென்னன் உடலுற்ற தீப்பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள் அனைத்தும் திருநீற்றின் பெருமையையும் அருமையையும் புகழ்ந்து கூறுவனவாகும்.

தென்னவன் உற்ற தீப்பிணியை மட்டுமின்றி மன்னுயிர்கள் அனைவரது தீப்பிணியையும் போக்கி இம்மையின் பத்தையும் மறுமையின்பத்தையும் ஒருசேர தரவல்லது திருநீறே. அது மன்னுயிர்க்கு இன்பந் தரும் இன்மருந்தாய், துன்பம் போக்கும் மந்திரமாய் விளங்குகின்றது. எனவேதான் பாண்டியனின் வெப்பு நோய் போக்கிய திருநீற்றினைப் பற்றிக் கூறும் சேக்கிழார்

"......... ....ஆலவாய் அண்ணல் நீறே
மன்னுமந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பதென்று
பன்னிய மறைகள் ஏத்திப் பகர்திருப் பதிகம்பாடி

என்று திருநீற்றை மந்திரமாகவும் மருந்தாகவும் உருவகித்துப் பாடுகின்றார்.

" நிலையாமை "

(மா. ப. தியாகராஜன், B .A.)

இந்தத் தலைப்பின் பெயரால் திருக்குறளில் ஒரு அதிகாரம் அமைந்துள்ளது. அதில் யாக்கை நிலையாமையைப் பற்றியும் செல்வம் நிலையாமையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையாத் தன்மைவாய்ந்த செல்வத்தை சேமிப்பதிலேயே வாழ்நாள் முழுவதும் வீணுக்கப்படுகிறது. அதையே ஒவ்வொரு மனிதனும் மதித்து வாழ்கிருன். அப்படி நிலையாச் செல்வத்தை நிலையாகப் பெற வேண்டுமென்று பாடுபடுவது புல்லறிவு என்று முதற் குறளில் நிலையாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார். எனினும் செல்வமில்லாதவனுடையவாழ்க்கை எவ்வளவு துன்பமுடையதாக இருக்கிறதென்பதைக் காண்கிறோம். திருக்குறளிலேயே நல்குரவு என்னும் அதிகாரத்தில் செல்வமில்லாதவனுடைய நிலை எவ்வளவு அவலமுடையதென விளக்கியுள்ளதையும் காண்கிறோம். மேலும் செல்வம் அறன் ஈனும் இன்பமுமீனும் என்றும் குறிப்பிடப்படுகிறது. பின் செல்வம் நிலையற்றது எனக் கூறியதன் கருத்துதான் என்ன என்று சிந்தித்துப்பார்க்குமிடத்து, சேமித்த பொருள் நிலைத்திருக்குமென்றெண்ணி மேலும் அதை ஈட்டுவதில் ஊக்கம் குன்றி விடுதல் கூடாதென்றுகருதவேண்டும். அதுவுமன்றி "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்ற பழமொழிக்கிணங்க செல்வம் பெற்றுள்ளபோதே அதனுல் அடையக் கூடிய அறத்தை வளர்த்து அதனுல் அருளைப் பெறல் வேண்டும். நிலைத்திராத பொருட் செல்வத்தை அருட்செல்வமாக மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். அதுவே மறுமைக்கும் நன்மை செய்ய உதவுவது.

அதேபோல் யாக்கையும் நிலையானதன்று. யாக்கை முதிர்ந்து தளர்வெய்தாமுனம் இருக்கக் கூடிய சில வாழ்நாட்களுக்குள் யாக்கையால் பெறவேண்டியபயனைப்பெறுதல் வேண்டும். ஒரு கனியைப் பெற்றவன் அதைச் சாப்பிடக்கூடிய பக்குவத்தில் இருக்கும்போது சாப்பிடாமல் வைத்து விடுவானுயின் அஃது அழுகிவிடும். அழுகிப்போய் விடில் சாப்பிட முடியுமா? ஆவிதான் போயினபின் யாரே

அனுபவிப்பார் இக்காயம்?“உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கிவிழிப்பது போலும் பிறப்பு” உறங்கும்போது அறியாமையிலிருக்கிறோம். உறங்கி விழித்த பின்னரே அறியும் தன்மை உண்டாகிறது. எனவே பிறத்தலும் அறிவு விளக்கமுறுவதற்கேயெனப் பெறப்படும். இந்த யாக்கை அறியாமையை அகற்றும் அரண் போலமைந்துள்ளது. இவ்வரண் ஆற்றலுடன் இருக்கும்போதே, சிதைவுறு முன்னம் முற்றறிவெய்தி இறைவனோடொன்றி இருக்கும் நிலையைப் பெறுதல் வேண்டும். யாக்கை நிலையாமை நினைவிலிருப்பின் முற்றறி வெய்த விரைந்து முயற்சி செய்வோம். எனவே யாக்கை நிலையாமை வற்புறுத்தப் பட்டுள்ளது. யாக்கை நிலையுள்ளதன்று என்று அதைப் பேணுதொழிவதோ துன்புறுத்துவதோ புறக்கணிப்பதோ இழுக்காகும்.

எவரஸ்ட் மலை உச்சிக்குப் போய்த் திரும்பினார்கள் என்று செய்தித் தாள்களில் படிக்கின்றோம். உலகத்தை வானவெளியில் சுற்றி வருகிறார்களென்று கேள்விப்படுகிறோம். எவ்வளவு முயற்சியோடு இக் காரியங்களைச் செய்திருக்கின்றனர் என்று விஞ்ஞான சாதனைகளை வியப்பாகக் கொண்டாடுகிறோம். ஆனால் அச்சாதனைகளால் பெற்ற பயன் யாது? என்று கேட்கக்கூட எண்ணம் வருவதில்லை. ஆனால் நாயன்மார்களின் சரித்திரத்தைப் படிக்கும்போதோ தேவார திருவாசகங்களைப் படிக்கும்போதோ அவைகளான் என்ன பயன் என்று கேட்கிறார்கள். கண்ணப்ப நாயனார் கண்ணைப் பிடுங்கி அப்பினார். சிறுத்தொண்டர் பிள்ளையை அரிந்து கறி சமைத்தாரென்று படிப்பதால் என்னபயன்? நாம்அப்படிச் செய்ய முடியுமா? அப்படியான அன்பு மக்களிடை வளர்ந்திருக்கின்றதா? என்றெல்லாம் கேள்வி கேட்கின்றனர். வானளாவிய கோபுரங்களையும் அழகிய சிற்பங்களையும் காணும்போது அவைகளால் என்ன பயனென்று கருதுவதில்லை. அவைகளில் சில சிதைந்து போயினவேயென்று வருந்துவதுமில்லை. ஏன்? தோன்றியவை மறையும்; நாளடைவில் எல்லாம் அழியத்தக்கனவே என்று கூறுகிறோம். “ஒருவனோடொருத்தி ஒன்றென்று உரைத்திடும் உலகமெல்லாம் வருமுறை வந்து நின்று போவதுமாதலாலே தருபவன் ஒரு

வன் வேண்டும்'' என எண்ணுகிறோம். ஒன்று போனால் மற்றொன்றை அவன் தந்துகொண்டேயிருப்பான்.

காலையில் எழும் சூரியன் மறைந்தவுடன் சந்திரன் எழுகிறான். அதுவும் மங்கிக் கிடக்கும் அமாவாசை தினத்தன்று நட்சத்திரங்கள் ஒளி கொடுக்கின்றன. நால்வர் பரப்பிய ஞான ஒளி இன்று மங்கிக் காணலாம். அடியார்கள் அன்று குறிக்கோளுடன் வாழ்ந்து கண்ட வாழ்க்கையின்பத்தை இன்று எண்ணிப்பார்க்கவும் இயலாத நிலையில் மக்களிருக்கலாம். அதனால் அவை பயனற்றவையெனக் கருதுவது பேதைமையன்றோ?

இங்குத்தான் நாம் நிலையாமையின் தத்துவத்தை உணர்தல் வேண்டும். இந்த உடல் பிணியினாலும் மூப்பினாலும் தளர்வுற்ற போதும் அதைப் பேணும் முயற்சி குன்றுவதில்லை. உயிர்ப்பண்பாடுகள் குறைவுபடுமாயின் அதைப்பேணும் வழிபாடு,பாராயணம் முதலியனவற்றைக் கைவிடுதல் நீதியோ? செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமையை உணரும்போது சூழ்நிலையும் உலக நிலையும் மட்டும் நிலையானவையா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ''மலையே வந்து வீழினும் மனிதர்காள் நிலையினின்றும் கலங்கப் பெறுதிரேல்'' என்று அப்பர் பெருமான் கூறுகிறார். அவர் ஒரு வாரம் நீற்றறையிலடைபட்டுக்கிடந்தபோது இறைவனை மறந்தாரா? அல்லது பழித்தாரா? அவருக்கு அந்நிலையிலும் நிலையாத யாக்கை நிலைத்திருக்க இன்பமளிக்கச் செய்தது அவனுடைய திருவடி நிழலன்றோ? ஆகவே அவனை மறக்கின் அதைவிட அவல நிலையிருக்க முடியுமா?

நிலையாமையின் தத்துவத்தை இவ்வாறு உணர்ந்து மறவாது நினைவுபடுத்திக்கொண்டு இறைபணிவழுவாது வாழ்க்கையைப் பண்படுத்திக்கொள்ளவே சைவசமயாசாரியர்கள் திருநீற்றை மங்காமல் பூசி மகிழ வேண்டுமென்றும் சைவசமய சிறந்த சின்னமாக அதை அமைத்துப் பாடியுள்ளார்கள். இந்நிலையாமையினைத் திருமுறைகளுள் ஓரோரிடங்களிற் காணலாம். ஆனால் பதினோராந் திருமுறைக்கண் ஐயடிகள் காடவர்கோன் அருளிய சேத்திரத் திருவந்தாதிக்கண் இதனை முற்றாகக் காணலாம்,

“ஸ்ரீவித்யா–பிரம்ம வித்தியா”

(அருளியவர் : ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகள்)

தொகுத்தவர் : பம்பாய் கணேசன்

ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகள் ஸ்ரீ சங்கரர் வழிவந்தமகான் 18–ஆம நூற்றாண்டில அவதரித்தவர். ஸ்ரீ ரமண மகரிஷி, இராமகிருஷ்ணபரமஹம்ஸர், அவதூத சுவாமிகள் போன்ற மகான்களிடம் தொடர்பு உண்டு. தற்சமயம் தென்னாற்காடு ஜில்லா திருக்கோவலூருக்கு அருகிலுள்ள தபோவனத்திலிருந்து அருள்பாலிக்கின்றார்.]

மனம், பிராணன் இரண்டும் நம் சரீரத்தை இயக்குகின்றன. இரண்டும் ஒன்றினலன்றி சரீரம் இயங்காது. பிராணயாமம் முதலிய யோக சாதனங்களால் பிராணனை ஒடுக்கலாம். ஆனாலும் மனம் ஓரளவுக்குத்தான் ஒடுங்கும். மீண்டும் பிராணன் தோன்றின் மனமும் தோன்றும். மனத்தை அடக்கினலோபிராணன்தானே அடங்கும். சிவன் சக்தி இரண்டும் ஒன்றினலன்றி உலகத்தில் எதுவும் இயங்காது. சக்தி தனித்திருக்கவும முடியாது. சிவன் தனித்து இருந்தால் கிரியாச்சமிருக்காது. சக்தி தனித்து இருக்காது. அது ஒன்றைப் (சிவனைப்) பற்றித்தானிருக்க முடியும். சக்தியும் சிவனும் ஒன்று பட்டால் சலனம் உண்டாகி சிருஷ்டி முதலிய கிரியைகள் உண்டாகும்.

சக்தியின் கருணையால் பிறப்பது அருள். சிவமே அன்பு; அன்பு இன்றி அருள் சுரக்காது. அருளின்றி அன்பு பயக்காது. அருளினல் இம்மை மறுமை இரு பயனும் விளையும். ஆனல் நிர்க்குண உபாசனையால் மறுமைப் பயன் வேண்டுபவர் இகசுகம் வேண்டார். ஒரு தாய் தன் சேய்க்கு அருளினல் வேண்டியதைக் கருணை மூலமாகக் கொடுப்பாள். தகப்பனே தனக்கு உரிமையிருந்தபோதிலும் தாயைக் கேட்டு வாங்கிக்கொள்ளச் சொல்வார். சக்தி சிவம் ஒன்று சேர்ந்தால் குறையேதுமில்லை. சாந்தி சிவத்

தின் கலை. பிராந்தி சக்தியின் கலை. சக்தியும் சிவனும் சேர்ந்திடில் ஏற்படுவது விசராந்தி.

சக்தி உபாசனையை ஸ்ரீ வித்யை யென்றும், சிவ உபாசனையை பிர்ம வித்தை யென்றும் சொல்லுவார்கள். முன்னதை சகுணமென்றும், பின்னதை நிர்க்குணமென்றும் சொல்லுவதுண்டு. சகுண உபாசனையால் இகத்திலும், பரத்திலும் பயனுண்டு. நிர்க்குண உபாசனையால் ஜீவன் முக்தனாய் மறுபிறவியற்றுச் சச்சிதானந்தமாய் விளங்கலாம்.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுப்பு

(தி. கி. நாராயணசாமி நாயுடு)

1. அறந்தாங்கி வட்டம்

ஆளப்பிறந்தான் 30/232-240
அறந்தாங்கி 02/409
ஆவுடையார் கோயில் 25/502-510
எட்டியாத்தளி 16/118-132
பரமாந்தூர் 25/511-522
பொன்பெட்டி 02/617

2. கும்பகோணம் வட்டம்

* ஆடுதுறை 07/356-370
* அழகாதிரிபுத்தூர் 08/283-289
அம்மன்குடி 27/235-238
* அணைக்குடி 26/628-633
அரித்துவாரமங்கலம் 02/611
பாபுராஜபுரம் 27/245; 246

3. சீர்காழி வட்டம்

* ஆச்சாள்புரம் 18/522-540
எருக்கூர் 11/299
இடைமணல் 18/441
மாதிர்வேளூர் 18/38
மாவத்தூர் 18/417-418
ஓலையாம்புத்தூர் 18/542-543
பெருமங்கலம் 18/416
புளிச்சக்காடு 18/541
புதுத்துறை 18/403-405
* சீகாழி 1896/123-125; '10/140; 18/360-401
* தாடாளன் கோயில் 18/402
* திருகோலக்கா 18/410
திருமயிலாடி 18/544
* திருநகரி 18/406-409
திருப்புன்கூர் 18/411-415
திருவெண்காடு 1896/110-122; 18/442-521
* வைத்தீஸ்வரன் கோயில் 18/419-423

4. தஞ்சாவூர் வட்டம்

கள்ளப் பெரம்பூர் 04/580-585
கரந்தட்டாங்குடி 1897/42-51
கோனேரி ராஜபுரம் 08/450; 09/622-662
கோவிலடி 01/270-281
நியமம் (நேமம்) 1899/15-16
ஓரத்தநாடு 11/166-167
செந்தலை 1897/56-68; 1899/6-14; 1926/197-215

தஞ்சாவூர் 1888/65-114 11/274-275
1890/52-53 18/552
1891/35-43 24/414-425
1893/55-58 25/349-351
1897/20-41 28/111
1933/202
தில்லைநெய்த்தானம் 1895/24-52: 11/276-291
திருசோற்றுத்துறை 1895/53-64; 31/121-208
திருச்சென்னம்பூண்டி 1901/282-303
திருக்காட்டுப்பள்ளி 1897/52-55
திருப்பழனம் 1895/123-129; 28/134-191
திருப்பூந்துருத்தி 1894/166; 31/75-120
திருஐயாறு 1894/213-256; 1918/135-157
24/426
திருவேதிகுடி 1895/65-69
திட்டை 34/148-154
வல்லம் 28/131-133
திருக்காணூர் (விஷ்ணும்பேட்டை) 11/161-165

5. திருத்துறைப்பூண்டி வட்டம்

அகத்தியாம்பள்ளி 04/504-507
கச்சினம் 26/152-162
களப்பாள் 02/656-663; 25/334-337
கொடியக்காடு 04/508-514
கோடிகரை 09/1
பண்ணைத் தெரு 26/163, 164
ரிஷியூர் 07/473-476
சித்தாய்மூர் (சித்தாம்பூர்)26/165-168
கொள்ளிக்காடு 35-36/126-140
திருத்தெங்கூர் 04/528-532
திருத்துறைப் பூண்டி 12/466-488
வேதாரண்யம் 04/415-503

6. நன்னிலம் வட்டம்

அச்சுதமங்கலம் 25/394–413
ஆம்பல் 17/236–239
கார்வெளி (வேலி) 23/224–227
கீழவாம் 25/345–348
* கோவில் திருமாளம் 10/93–117;240–249
குழிக்கரை 11/82–84
குண்டலூர் 22/538–539
கூத்தனூர் 28/109–110
* சீயாத்த மங்கை 22/72-78
* ஸ்ரீவாஞ்சியம் 11/63–79
* திருச்செங்காட்டங்குடி 13/51–82
* திருக்கொள்ளம்பூதூர் 1899/1,2;17/250-255
திருக்கண்டீஸ்வரம் 11/80
* திருக்கண்ணபுரம் 22/494-537
* திருக்கருகாவூர் 10/35–46;18/424–440
திருமயானம் 06/53–65; 25/259–261
* திருமீயச்சூர் 02/635–641
* திருபாம்புரம் 11/85–99
* திருப்புகலூர் 28/42–108
* திருவிடைவாயில் 18/8–33
* திருவீழிமிழலை 08/382–449
* விற்குடி 22/79-81

7. நாகப்பட்டினம் வட்டம்

ஆவாணி 22/482–493
கீவளூர் 04/515–517
செம்பியன்மகாதேவி 25/479–501
சிக்கல் 11/100–107
தப்ளாம்புலியூர் 32/60
தேவூர் 04/518–519

திருக்காரவாசல் 08/451–454
வலிவலம் 11/108–116

8. பட்டுக்கோட்டை வட்டம்

ஏரமங்கலம் 36/116–125
கோவில்காடு (அத்திவெட்டி மதுரா) 26/194
கோவிலூர் 08/181–227
மங்களவூர் (வெள்ளாள விடுதி) 31/211–212
மருங்கபள்ளம் 29/209
முட்டகுரிச்சி 26/196
பட்டுக்கோட்டை 25/338–342
சாலுவநாயக்கன் பட்டினம் 25/343 a–c & 344
திருச்சிற்றம்பலம் 26/176-193
திருப்புனவாசல் 02/612–616
திருவோணம் 31/209,210
விக்ரமம் 26/195

9. பாபநாசம் வட்டம்

ஆலங்குடி 1891/44;1894/165;1899/3–5;
20/496–523
ஆண்டான் கோயில் 08/290
அரயபுரம் (பாபநாசம் மதுரா) 22/478–481
அவளிவ நல்லூர் 02/603-606
ஆவூர் 11/81
ஐய்யம்பேட்டை 28/112–125
இரும்புதலை 10/32–34
மணக்கால் 28/126–130
மெலட்டூர் 10/28–31
முனியூர் 02/607–610
நல்லூர் 11/40–62
நெல்லித் தோப்பு 21/539-541
பாபநாசம் 22/446–477

புள்ளமங்கை 21/546–559
சூலமங்கலம் 11/292–296; 21/560–564
திருவைகாவூர் 14/48–60

10. மன்னார்குடி வட்டம்

மகாதேவப் பட்டினம் 26/175
மன்னார்குடி 1897/85–109; 25/414–416
பாமணி 26/169–174
தென்பாதி 25/417,418
திருக்களர் 02/642–655
திருமக்கோட்டை 17/256–272
திருவாராமேஸ்வரம் 11/117–158

11. மாயூரம் வட்டம்

* ஆக்கூர் 25/224–231
ஆனைதாண்டவபுரம் 11/297
ஆனங்கூர் 26/73–78
ஆத்தூர் 27/120–134
சித்தக்காடு 25/33–34
தர்மதானபுரம் 27/163
எழுமகளூர் 25/44
* இலுப்பைப்பட்டு 27/135–139
கடலங்குடி 27/161,162
காளி 27/118
கழுக்கனிமுட்டம் (பல்லவராயன்பேட்டை) 25/17
காஞ்சா நகரம் 25/36
காப்பூர் 25/38
கருங்காடு 1892/10
* கீழ்பெரும்பள்ளம் 25/214

ஆலடி விநாயகர்

மு. அ.

இயற்கையில் அமைந்துள்ள சில அமைப்புக்கள் பார்க்க மிகவும் விசித்திரமாகவும் சில சமயம் அற்புதமாகவும் உள்ளன. சிவபுரத்துக்குப்போகிற வழியில் அமைந்துள்ள ஆகாச விநாயகர் கோயில் இத்தகைய இயற்கை அற்புதங்களில் ஒன்று.

சிவபுரம் என்ற பாடல் பெற்ற தலம் சோழ நாட்டில் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பஸ் மார்க்கத்தில் 2 மைல் 3 பர்லாங் கல்லருகே கிழக்கு நோக்கிச் செல்லும் கப்பிச் சாலையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இது சம்பந்தர் பதிகங்கள் மூன்றும் அப்பர் ''பாரதனில் பயிர் ஆனான் காண்'' என்ற அருமைத் திருத்தாண்டகம் ஒன்றும் கொண்டது. இத்தலத்துக்குச் செல்லும் வழியில் ஆகாச விநாயகர் என்று மக்கள் குறிப்பிடுகின்ற ஒரு விநாயகமூர்த்தி தமக்கென்று ஒரு கோயில் அமைத்துக்கொண்டு அதில் எழுந்தருளியிருக்கின்றார்,

இந்த இடத்தில் சாலையின் ஓரமாக வடபுறத்தில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. இது 150 ஆண்டுகளாக இருக்கக்கூடும், இவ்வாலினடியில் பண்டைக் காலத்தில் ஊரார் ஒரு பிள்ளையாரை வைத்து வழிபட்டார்கள் போலும். பிள்ளையார் பெரிய திருவுருவம்; நர்த்தன கோலம். இவரைச் சுற்றி அருகில் வெறும் மேடை ஒன்றுமட்டும் இருந்தது, நாட்கள் பல சென்றன. ஆல் சுற்றம் பெருகித் தழைத்தது; செழித்து வளர்ந்து பல விழுதுகள் இறக்கிப்படர்ந்தது. மேடை தகர்ந்து தூளாகி மறைந்து போயிற்று. பெருமான் மட்டும் தன்னந்தனியாக இருந்தபடியே இருந்தார். அவருடைய தனிமையை எண்ணி ஆலானது தன் பல்லாயிரங் கைகளால் அவரை மூன்று புறமும் சூழ்ந்து தழுவி ஏந்திக் கொண்டது.

ஈ பூசித்தது, எறும்பு பூசித்தது,சிலந்தி பூசித்தது, வண்டு பூசித்தது, நண்டு பூசித்தது என்று நாம் தேவாரங்களில் கேள்விப்படுகிறோம். ஆனால் இங்கு ஆலமரமே ஆண்டவனைப் பூசித்து வருவது கண்ணாரக் காணும் அற்புத நிகழ்ச்சி.

150 ஆண்டுகளுக்கு மேலாக இயற்கையாகவே வளர்ந்து ஓங்கி வந்த இவ் ஆலமரம் பெருமானுடைய முன்புறம் நீக்கி மற்ற மூன்று புறங்களிலும் சுவர் வைத்ததுபோல அடைத்துக்கொண்டது, மூன்று புறமும்சூழ்ந்த ஆலின்விழுதுகள் கர்ப்பக் கிரகம்போலச் சுவராக நிற்கின்றன. சந்நிதி மாத்திரம் திறந்திருக்கிறது. 4 அடி அகலத்தில் இருபுறமும் 10அடி நீளம் வரையில் மரத்தின் விழுதுகள் கால் இறங்கி அர்த்த மண்டபச் சுவர்போல அமைந்துள்ளன. பெருமானுக்கு உச்சியில் மரத்தின் கிளைகள் நெருங்கிப் பின்னி மண்டபத்தின் கூரைபோல அமைந்துள்ளன. உள் உயரம் ஆறடிக்குக் குறையாமல் இருக்கிறது சுவாமி முன்புறம் பத்தடி வரையில் நாலடி அகலத்துக்கு எந்த மறைப்புமில்லாமல் சந்நிதியாக அமைந்திருக்கிறது. இந்தத் தூரத்துக்கு இப்பால் மரத்தின் நிழல் விசாலமாய் இடம் அகன்றதாய் விழுதுகள் இறங்கி தூண் நிறுத்திய மகா மண்டபம் போலக் காட்சி தருகிறது. இங்கு பலர் வந்து இருக்கலாம்; தரிசிக்கலாம்.

சிவபுரம் குருக்கள் இங்கு வந்து ஒரு கால பூஜை செய்கிறார். சுற்றுப்புறமுள்ள மக்கள் தினந்தோறும் இங்கு வந்து பிரார்த்தனை செலுத்துகிறார்கள். இவர்கள் இப்பெருமானை ''ஆகாச விநாயகர்'' என்று சொல்லுகிறார்கள். பெருமான் கிழக்கு நோக்கியிருக்கிறார்.

அனேக ஸ்தலங்களில் பெருமான் சுயம்புமூர்த்தி என்று தல வரலாறு கூறுகின்றது. இங்கு ஆலயமே சுயம்பு என்று சொல்லத் தோன்றுகிறது இவ்வாலமரம் இளமரமாகத் தோன்றுகிறது. இன்னும் நூறு வருஷத்துக்கு மேலும் உயிர் வாழ்ந்திருக்கக்கூடும். இவ்வாலின் அடியில் விநாயகமூர்த்தி தங்கியிருப்பதால், மக்கள் ஆலயே கோயிலாகப் பாவித்து மரக்கிளைகளுக்கு எந்தச் சேதமும் விளைக்காது இருந்து வருகிறார்கள்.

பொன் மொழிகள்

திரு. G. U. போப் அவர்கள் திருவாசக மொழி பெயர்ப்பு நூலைத் தாம் எழுதத் தூண்டிய நிகழ்ச்சியை அந் நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:—

"இந்நூல் என் மனத்தில் உருவெடுப்பதற்குச் சில ஆண்டுகட்குமுன் ஒரு நாளிரவு வழிபாடு முடிந்தபின், பேரியல் கல்லூரி முதல்வரோடு, கல்லூரியின் உள் முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். எங்கள் பேச்சு, தமிழ்ப் புராணங்கள், பாக்கள், தத்துவங்கள், இவைகளில் திரும்பியது. சிறிது நேரம் கழித்துப் பேச்சில் சிறிது ஓய்விருந்தபோது அவர், தமக்கே உரிய போக்கில், வேகமாகத் திரும்பி "நீ இதை எழுதி அச்சிட வேண்டும்" என்று சொன்னார். இதற்கு "இந்த வேலையை எடுத்துக் கொண்டால் வெகு நாளாகும். எனக்கு மரணமிலா வாழ்வு இல்லையே" என்று பதில் சொன்னேன். அப்போது அவருடைய அன்புதவழ்ந்த முகமும், வெள்ளிய கேசமும் நிலா ஒளியில் நன்றாகத்தெரிந்தது. அவர் என் தோள்மேல் கையை வைத்துச் சொன்ன வாசகமாவது: நீண்ட காலம் வாழ்வதற்கு வழி ஒரு சிறந்த பணியைத் துவக்கி நடத்துவது. அப்பணியை முடிக்கும்வரை நீ உயிர் வாழ்வாய்" அப்போது நான் பூரணமாக நம்பவில்லை—இருந்தாலும், அவ்வார்த்தைகள் தெய்வீக மொழிகள்போல் என் மனத்தில் அடிக்கடி தோன்றி மனச்சோர்வு நேர்ந்தபோதெல்லாம் ஊக்கமளித்தன. அவ்வார்த்தைகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவர் மறைந்து விட்டார்!

—கொ. நீ. சி.

மதிப்புரை

சேந்தன் செந்தமிழ்

(மூலமும்-உரையும்)

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளியது,

2-ஆம் பதிப்பு தா. வெங்கடாசல முதலியார் வெளியீடு.

1/34, ஆபீசு வெங்கடாசல முதலி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

விலை ரூ. 1-50

'சேந்தன் செந்தமிழ்' என்னும் முருகனைப் பற்றிய பக்திப் பனுவல், அதனை ஆக்கியோராகிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளால் 1906-இல் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. இவ்வாண்டு இந்நூலின் இரண்டாம் பதிப்பு சுவாமிகளின் சீடர் 'குமாரசிவம்' எனப் பெயரிய திரு. நா. வேங்கடாசல முதலியார் அவர்களால் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இதை திருமுருக கிருபானந்தவாரியாரின் சாற்றுக் கவியும், டாக்டர் மு. வ. அவர்களின் முகவுரையும் திரு. ந. ரா. முருகவேள் அவர்களின் அணிந்துரையும் அணி செய்கின்றன. இப்பதிப்பில் சுவாமிகளாலேயே வரையப் பட்ட "சேந்தன் செந்தமிழ்ப் புலன் வனப்பு' என்ற அகராதியும் சுவாமிகளின் மேற்பார்வையில் அவர்கள் மாணுக்கர் திரு. மா. துரைசாமி முதலியார் அவர்களால் இயற்றப் பட்ட உரையும் சேர்க்கப்பட்டுள்ளன. மூலநூல், உரைப் பகுதி இரண்டும் வடசொல் கலவாது யாக்கப்பட்டுள்ளது இந்நூலின் தனிச் சிறப்பு. ஐம்பது வெண்பாக்கள்கொண்ட இந்நூல், முருகனின் பெருமை, அருட்டிறம், அன்பு நெறி ஆகியவற்றைச் சுட்டுவதுடன் பேரின்பம் பெறுதற்குரிய வழிவகைகளையும் காட்டுகிறது. முருகன் திருப்பெயரை ஓதல், அன்பர்களின் பசிப் பிணியைப் போக்குதல், ஆசை களைதல் ஆசியவை இவற்றுள் ஒரு சில. இவையல்லாது இறைவன் தன்மை (2-ஆம் பா), அடிகள் தன்மை (3-ஆம் பா), திருவடிப்பெருமை (11-ஆம் பா) இறைவன் திருவருள் (43-ஆம் பா) இரண்டொன்றிலா பேரின்ப நிலை (46 ஆம்பா) முதலிய சமயக் கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

முப்பத்தாறு பக்கங்கள் கொண்ட முன்னுரையில் நூலாசிரியர் 'வடமொழித் திரிவும், அழிவும், தென்மொழி வழக்குமாம்? சொற்களைத் தொகுத்தும் வகுத்தும் தந்திருக் கிருர். தமிழில் ஆளப்பட்டுவந்துள்ள தத்சமம், தத்பவம் என்ற வகைத்தான சொற்களையும் அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களையும் தந்துள்ளார். எடுத்துக்காட்டாக 'சப் தம், சத்தம், ஒலி; ஹாரம், ஆரம். தொடையல் (மாலை)! ஒருபொருட் பல சொற்கள் என்ற தொகுதியில் ஐம்பது சொற்கள் ஆராயப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 'அறி ஞன்' பெயராக வடமொழியில் 'வித்வாந், விபச்சித், விச க்ஷணன், ஸுதி கோவிதன், புதன். தீரன் மநீஷிந். ப்ராஜ் ஞன், பண்டிதன், கவி, தீமத், ஸூரி, க்ருஷ்டி என்ற சொற் கள் தரப்பட்டுள்ளன. பொருள் வகையில் தொடர்புள்ள வடசொற்றொகுதிகளும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட் டாக 'உதயம், அஸ்தமயம்; ஆதி மத்யம், அந்தம்; மனம், மனஸ், மனிஷா, மானஸம்; குடும்பம் குலம், கோத்ரம்' நில யம் என்பதினின்றும் நிலம்என்பதும், கரத்தை உடையது கரி (யானை) என்றும் தமிழ்ச் சொற்களுக்கு வேண்டியவாறு வடமொழி கற்ருருட் சிலர் கூறும் பொருந்தாக் கூற்றை சுவாமிகள் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். நிலம் 'நில்' எனும் முதனிலையினின்று பெறப்பட்ட தெனவும். கரிய நிறத்தை உடைத்தாதல்பற்றிக் கரிஎனத் தமிழில்வழங்கிற் றெனவும். இவைபோன்ற வடசொற்கள் என்று கருதப்படு கின்ற பல சொற்களுக்கு அவை தமிழ்ச் சொற்களே என்று ஏற்ற விளக்கம் தந்துள்ளார்கள். 'அமரஸிம் ஹம். சப்தார்ணவம்' முதலிய வடமொழி நிகண்டுகளில் பற் பல தென்மொழிகள் இயைந்தபடி சேர்க்கப்பட்டன' என்ற ஆசிரியரின் கூற்று பெருமளவில் ஒப்புக்கொள்ளத் தக்க கருத்தேயாம். இற்றைய மொழிநூல் வல்லார்களான சுநீதி குமார் சாட்டர்ஜி—நன்னெறி முருகன் என்று தம்மை அழைத்துக் கொள்பவர். மேனுட்டு வடமொழிப் பேராசிரி யர் பர்ரோ-எமனே ஆகியோர் தென்மொழி வடமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டுள்ள துபோல வடமொழியும்வேத காலத்திலேயே பண்டைத் திராவிடச் சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளது எனமொழிவர். சுவாமிகளால்வட சொற்கள் என்று கருதப்படுகின்ற 'குடாரம், குடீ. பண்டிதன், பூஜா,

மஹிளா, ஆகியவைகூட திராவிடமொழியினின்றும் போந்தவை என மேற்குறிப்பிடப்பட்டுள்ள மொழியியல் அறிஞர்கள் கூறுவர். அத்தா (அத்தை) என்பதும் தக்கண மொழியினின்றும் வடமொழிக்கு வந்திருக்கக்கூடும் என மானீர் வில்லியம்ஸ் குறிப்பிடுகிறுர். இந்நூலில் வடமொழிச் சொற்களுக்குத் தரப்பட்டுள்ள பொருள் முற்றும் தரப்பட்டதாகக் கொள்ளுதற்கில்லை. அதுநோக்கமும் இல்லை என்றே கருதலாம். எடுத்துக்காட்டாக 'சங்கிதை' (ப. 74) என்பதற்குத் 'தொகுப்பு' என்ற நேர்பொருள் சேர்க்கப்படல் வேண்டும். ஒரு சில இடங்களில் பொருள் இயைபுள்ளதா என்பது மேலும் சிந்தித்தற்குரியது. எடுத்துக் காட்டாக, 'உருத்திரன்' (ப. 54)—மாண்பினன்; 'உஷ்ட்ரம்' (ப 57) நெடுங்கழுத்து; 'இராகு' (ப. 50)—கரும்பாம்பு; 'சிவன்' (ப, 84)—நல்லான்; தாரகம்' (ப. 95)—எஞ்ஞான்றும் புதுமைத்து. வடசொற்களிற் சில இலக்கணத்தில் உருபு ஏற்பதற்கு முன்னர் உள்ள நிலையில் தரப்பட்டுள்ளன. இவை வழக்கில் பயிலப்படுவன அல்ல, எடுத்துக் காட்டாக கேஸரிந், சாகிந், சர்மந், மநீஷிந், தீமத் முதலியன. இவை கேஸரீ, சாகீந், சர்ம, மநீஷீ, தீமான் என்ற முதல் வேற்றுமை ஒருமையில் குறிப்பிடப்பட்டிருத்தல் பொருந்தும்

எனினும் சுவாமிகள் தந்துள்ள குறிப்புக்கள் மொழியியல் ஆராய்வாருக்கும், அவர்கள் நூல் முருகனிடத்தே மக்களை ஆற்றுப்படுத்துதற்கும் உதவும்வகையில் அமைந்துள்ளனவாதலின் இந்நூலை மனமுவந்து வரவேற்கின்றோம். வட சொல்லின் துணையன்றித் தமிழில் நூல் எழுத இயலும் என்பதை நிறுவுதற்பொருட்டே இந்நூலின் பாக்கள் அமைவுற்றன என்பதை சுவாமிகளே கூறியுள்ளார்கள். இரு மொழிகளும் இரு கண்கள் எனவும், ஆற்றல் வாய்ந்தமொழிகள் எனவும் சுவாமிகள் கருதி வந்தனர் என்பதை இந்நூலை கற்பார் உள்ளத்தில் இருத்திக்கொண்டு பயில்வரேல், நூலின் சிறப்பை உணர்வர். பயனையும் பெறுவர் என்பது உறுதி!

பெ. திருஞானசம்பந்தன்.
வடமொழிப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை,

மதிப்புரை

"இதயக்கோயில்" எனும் பெயரிய நூல்ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. N. S. சிதம்பரம் அவர்கள் பல இனிய தமிழிசைப் பாக்களைப் பாடி வெளியிட்டிருக்கிறார். இறைவன் பெருமை, இயற்கை வனப்பு, தமிழின் சிறப்பு, முதலிய பலவற்றைப்பற்றிப் பல்வேறு தலைப்புகளில் இசைப்பாடல்கள் பல இந்நூலில் உள. இவை இசைவாணர்களுக்குத் தமிழிசை யரங்கில் பாட மிகத் தகுதியானவை. பயனற்ற பாக்களைப்பாடி உலகத்துயிர்களைக்கெடுக்கும் பால் உணர்ச்சியூட்டத்தக்க பாடல்கள் மலிந்துள்ள இக்காலத்தில் இவைபோன்ற பாடல்கள் மிகவும் வரவேற்கத் தக்கன. அன்பர்கள் வாங்கிப் படித்து இசை மணம் கமழப்பெற்றுச் சிறந்தோங்குவார்களாக. விலை ரூ. 1-75.

இந்நூல் கிடைக்குமிடம்:

தி இந்தியன் மியூசிக் பப்ளிஷிங் ஹவுஸ்,
4, பந்தர் தெரு சென்னை-1.

—(அம்பை)

குறிப்பு:

. இந்திய தத்துவத்தைப் பற்றிய ஒரு புதுநூல்

Doctrine and Argument in Indian Philosophy by Ninian smart (George Allen and unuru Ltd London, 1964) இந்திய தத்துவங்களின் கோட்பாடுகளைப் பற்றியும் தருக்கங்களைப்பற்றியும் தெளிவாக இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. பரிபாஷை விலக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தத்தைப்பற்றிச் சிறப்பான விளக்கம் 6 பக்கங்களில் தரப்பட்டுள்ளது. ஸ்ரீ மெய்கண்டாரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக சைவ சித்தாந்தத்தை விசிஷ்டாத்வைதத்திற்கு ஒப்பிட்டுக் காட்டுவது மேனாட்டவர்களின் வழக்கம். இந்த நூலில் ஆசிரியர் த்வைத மதத்திற்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இவைகள் அறியாமையே.

—நல். மு.

மதிப்புரை

"மலேயா-இந்தியா யாத்திரை"

இந்நூல் மலேயா வாசியால் எழுதப்பெற்று இலங்கை வாசியால் வெளியிடப் பெற்றது. அதாவது சைவத் திரு வாளர் கா. இராமநாதன் செட்டியார் B. A., B. L., அவர்களால் எழுதப்பெற்றது; சுழிபுரம் திரு. பே. கிருஷ்ணர் அவர்களால் வெளியிடப் பெற்றது. இந்நூலிலுள்ள சில கட்டுரைகள் முன்னரே சித்தாந்தப் பத்திரிகையில் வெளி வந்துள்ளன.

திரு. கா. இராமநாதன் செட்டியார் சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் மிகத் தொடர்புடையவர். மலேயாவில் சைவத் தொண்டுபுரிந்து வருபவர். அவர், தெய்வீக வாழ்க்கையில் தான் மட்டும் தனியாக முன்னேறுவதை விரும்புவதில்லை. மற்றவர்களையும் தன்னுடனே அழைத்துச் செல்வார். அதற்கு அவர் கையாளும் சாதனங்கள் காலைக் கூட்டு வழிபாடு, அந்தர்யோகம், தலயாத்திரை முதலியன.

அவர் இருபத்தொரு அன்பர்களுடன் மலேயாவிலிருந்து கப்பலில் புறப்பட்டு இந்தியாவிற்கு வந்து கன்னியாகுமரி முதல் ரிஷிகேசம்வரை சென்று இடையிலுள்ள பல தலங்களைத் தரிசித்தார். இவ் யாத்திரையை அழகுபடக் கூறுவது இந்நூல்.

இந்நூல் அவருக்கேயுரிய எளிய நடையில், பழகு தமிழில் எழுதப்பெற்றது. ஆங்காங்கு சென்ற தலங்களின் பெருமைகளும், உயரிய கருத்துக்களும் இலேசாகச் சொல்லப்படுகின்றன.

சில உதாரணங்கள் பின்வருமாறு :—

"இந்த யாத்திரைக்கு இவ்வளவு தயார்செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இந்த உலகைவிட்டு யாத்திரை செய்வதற்கு ஒருவிதத் தயாரிப்பும் செய்யத் தோன்றவில்லையே!

இது ஏனோ? ஒரு யாத்திரை போவது நமக்குத் தெரிகிறது; மற்ற யாத்திரை போவோம் என்பதை அறவே மறந்து விடுகிறோம்."

"எங்கள் யாத்திரையின் நோக்கம் மூன்று எனலாம். ஒன்று, மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்குவது; இரண்டு, பெரியோர்களைத் தரிசிப்பது; மூன்று சிறந்த சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பது. இந்த மூன்றிலும் அருமையாகக் கிடைப்பது பெரியோர் தரிசனம். வெறும் படிப்பாலும்,பணத்தாலும் இகலோக ஆற்றலாலும் பகட்டாக மின்னுகின்ற பல குருமார்கள்நிறைந்த இக்காலத்தில், சான்றோர் உறவு அருமையுளெல்லாம் அருமை!

ரிஷிகேஷத்தில் சிவானந்தரைச் சித்திரிக்கிறார் :—
"சுவாமிகள் பொன்மலைபோல் காட்சி யளித்தார். நல்ல உயரம், கனத்த சரீரம், தளர்ந்த நடை, இருவர் கைலாகு கொடுத்துக் கூட்டி வந்தார்கள். முதிர்ந்த வயது, கண்ணிலே அருள், வாயிலே புன்சிரிப்பு."

இந்நூலை இவ்வாறு முயற்சியின்றிப் படித்துப் பயன் பெறலாம்,

2. "மணிவாசகப் பாமாலை"

தொகுத்தவர்: திரு. கா. இராமநாதன் B. A., B. L.,

வெளியிட்டவர் : திரு. ராம. ப. மெ. சோ. தெய்வராயன்
கோலாலம்பூர்.

இந்நூலில் திருவாசகத்தினின்று தேர்ந்தெடுத்த அறுபது பாக்கள் மிளிர்கின்றன. திரு. ராய. சொக்கலிங்கனார் இந்நூலுக்கு ஒரு பாராட்டுரை வழங்கியிருக்கிறார். இந்நூல் சிறிய அளவில் உயர்ந்த காகிதத்தில் கவர்ச்சியாக அச்சிடப் பெற்றிருக்கிறது.

—கொ. நீ. சி.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.